ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2182/36 – 2020 ජූලි මස 01 වැනි බදාදා – 2020.07.01

*2182/36 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்பு**

*அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2019.08.22 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

செயலாளர்,
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*2020, யூலை 01.*

**01. அமுல்படுத்தப்படும் திகதி**

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பானது 2020.07.01 ஆந் திகதி தொடக்கம் அமுலாகும்

**02. நியமன அதிகாரி**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்ட கல்வி அமைச்சின் செயலாளர்

1A - G32423 - 18(2020/07)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**03. சேவை வகை/சேவை வகைகள்**

3.1. சேவை வகை: இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை

3.2. தரம்

2 ஆம் வகுப்பு

1 ஆம் வகுப்பு

**04. சேவையின் பொதுச் செயற்பாடு**

தேசிய கல்விக் கொள்கைகளுக்கு ஏற்ற வகையில் நிரல் மற்றும் மாகாண கல்வி அமைச்சுகளின் நிர்வாகத்தின் கீழ் கல்வி வலயத்தில்/ கோட்டத்தில் உரிய விடயம் தொடர்பான விசேட நிபுணர்களாக செயலாற்றி பாடத்திட்டங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் தொடர்பில் ஆசிரியர்களை திசைமுகப்படுத்தல், வலயத்தில்/கோட்டத்தில் ஆசிரிய பயிற்சிக்கான தேவைகளை இனங்கண்டு ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு தேவையான செயற்பாடுகளை அமுல்படுத்தல், தேசிய ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு செயற்பாடுகளின் போது செயலூக்கத்துடன் பங்களிப்புச் செய்தல் மற்றும் வலயத்தில்/கோட்டத்தில் தனது பாடத்திற்குரிய கல்வித் தரங்களை மேம்படுத்துவதற்கு ஒத்துழைத்தல்.

**05. சம்பளம்**

5.1. சம்பளக் குறியீட்டு இலக்கம்
ஜீ ஈ. 3 – 2016

5.2. சம்பள அளவுத்திட்டம்
ரூ. 34,615 - 3x 680 – 7x 1,335 - 20 x 1,400 = 74,000.00

5.3. வகுப்பு முறை மற்றும் உரிய சம்பள முறை

| வகுப்பு | சம்பளப் படிமுறை | ஆரம்பச் சம்பளம் |
|---|---|---|
| 2 ஆம் வகுப்பு | 1 - படிமுறை | ரூ. 34,615 |
| 1 ஆம் வகுப்பு | 11 -படிமுறை | ரூ. 46,000 |

**06. சேவைக்குரிய பதவிகள்**

6.1.

| அனுமதிக்கப்பட்ட பதவியின் பெயர் | தரம் | அனுமதிக்கப்பட்ட பதவியின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆசிரிய ஆலோசகர் | II/I | 4471 |

குறிப்பு : ஒவ்வொரு பாடம் மற்றும் மாகாணங்களுக்கும் அமைய அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை தகவல்கள் "அ" அட்டவணையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

6.2 இணைந்த அலுவலர் எண்ணிக்கை : 4471

ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவியுயர்வு வழங்கும் செயற்பாடுகள் தொடர்பில் தரம் II மற்றும் தரம் I க்குரிய பதவிகள் அனைத்தும் இணைந்த அலுவலர் எண்ணிக்கைக்கு உரியதென கருதப்படல் வேண்டும்.

6.3 பதவிகளின் தன்மை : நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடையது

(ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்படல் வேண்டும்)

**07. ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறைமை**

7.1. ஆட்சேர்ப்பு செய்யப்படும் விகிதாசாரம்

| வகுதி | வீதம் |
|---|---|
| திறந்த | ஏற்புடையதன்று |
| மட்டுப்படுத்தப்பட்ட | 100% |
| திறமை | ஏற்புடையதன்று |

7.2. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :

7.2.1. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம்

ஆசிரிய ஆலோசகர் சேவை 2 ஆம் வகுப்பு

7.2.2. தகைமைகள் :

பின்வரும் தகைமைகள் கொண்ட அரசாங்கப் பாடசாலைகளில் சேவை நிரந்தரமாக்கப்பட்ட இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1 இல் அல்லது 2-1 இல் சேவைபுரியும் ஆசிரியர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுவர்.

7.2.2.1. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்

I பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்திலிருந்து குறித்த பாடம் தொடர்பாக பெற்றுக்கொண்ட பட்டத்துடன் கூடிய ஆசிரியராக இருத்தல்,

அல்லது

II குறிப்பிட்ட பாடம் தொடர்பான ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது குறிப்பிட்ட பாடம் தொடர்பான போதனாவியல் டிப்ளோமாவுடன் கூடிய ஆசிரியராக இருத்தல்,

அல்லது

III உரிய பாடத்தின் கீழ் “ஆ” அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட ஆசிரியராக இருத்தல். ஒவ்வொரு பாடத்திற்குமுரிய கல்வி மற்றும் தொழிற்தகைமைகள் “ஆ” அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

7.2.2.2 அனுபவம் :
இலங்கை ஆசிரியர் சேவையில் உரிய பாடத்தை கற்பித்தல் தொடர்பில் 10 வருடத்திற்கு குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல்

7.2.2.3 உடற்தகுதி :
சகல விண்ணப்பதாரர்களும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றக் கூடிய உடல் மற்றும் உள ரீதியான தகுதியுடன் இருத்தல் வேண்டும்.

7.2.2.4. வேறு :

I. பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

II. அராங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்

III. ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்படும் போட்டி பரீட்சைக்கு தோற்ற முடியுமான ஆகக்கூடிய தடவைகள் மூன்று(3) ஆகும்

IV. ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான சகல தகைமைகளும் வர்த்தமானியில் குறிப்பிடப்படும் தினத்திற்குப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7.2.3. வயது :

7.2.3.1 ஆகக் குறைந்த வயதெல்லை – ஏற்புடையதன்று

7.2.3.2 ஆகக்கூடிய வயதெல்லை 50 ஆகும்

7.2.4. ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை :

7.2.4.1 எழுத்துமூல பரீட்சை

| பாடங்கள் | அதிகபட்ச புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. பிரயோக கல்வி உளவியல், கல்வி முகாமைத்துவம், நவீன கல்வி பிரயோகம் தொடர்பான சம்பவ கற்கைகள் | 100 | 40% |
| 2. பாடத்துறைக்குரிய தேர்ச்சி | 100 | 40% |

7.2.4.1.1 நடாத்தும் அதிகாரி – பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது கல்விச் செயலாளரினால் பெயரிடப்படும் நிறுவனம் ஒன்று

7.2.4.2 - தொழிற் தேர்வு - ஏற்புடையதன்று

7.2.4.3 - பொது நேர்முகப் பரீட்சை - ஏற்புடையதன்று

7.2.4.4 - தகைமை மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | தெரிவு செய்வதற்கு பரிசீலிக்கப்படும் குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| பகுதி I | | |
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | ஏற்புடையதன்று |
| 2. ஆசிரியத் தொழிலில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் | 15 | |
| 3. ஆங்கில மொழித் தேர்ச்சி | 10 | |
| 4. தகவல் தொடர்பாடல் திறன் | 10 | |
| பகுதி II செயன்முறைப் பரீட்சை | | |
| செயன்முறை கற்பிக்கும் திறன் கற்றல்/கற்பித்தல் முறைமை | 100 | 60 |

*குறிப்பு:*

1. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய துறைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் ஆகக்கூடிய புள்ளிகளுக்குள் ஒவ்வொரு தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சைக்குமான விரிவான புள்ளிகள் வழங்கும் திட்டம் கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டு வெளியிடப்படும்.

2. எழுத்து மூல பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசைப்படி மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய வெற்றிட எண்ணிக்கை போன்று இருமடங்கு எண்ணிக்கையினர் தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படுவர். அந்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் செயலாளரினால் அனுமதிக்கப்படும் தேர்வுக் குழுவினால் செயன்முறை பரீட்சை ஒன்று நடாத்தப்படும். தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது அடிப்படை தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

3. செயன்முறை பரீட்சையில் சித்திபெறுவதற்குத் தேவையான ஆகக்குறைந்த புள்ளிகளை பெற்றிருக்கும் விண்ணப்பதாரிகள் எழுத்து மூல பரீட்சை மற்றும் தகமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுள்ள புள்ளிகளின் திறமை வரிசைப்படி கல்வி அமைச்சு செயலாளரினால் ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

7.2.4.4.1 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி கல்வி அமைச்சின் செயலாளராவார்.

7.2.5 விண்ணப்பங்கள் கோரப்படும் முறை :

அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலமாக அல்லது பகிரங்க அறிவித்தல் மூலமாக மற்றும் இணையத்தளத்தில் விளம்பரப்படுத்துவதன் மூலமாக விண்ணப்பங்கள் கோரப்படும்.

**08. வினைத்திறன் காண் தடைதாண்டல்**

| 8.1 எத்தகைய வினைத்திறன்காண் தடைதாண்டல் என்ற விபரம் | எத்தனை வருடங்களுக்கு முன் வினைத்திறன்காண் தடை தாண்டலில் சித்தியடைய வேண்டும்? என்ற விபரம் | வினைத்திறன்காண் தடைதாண்டலின் தன்மை எழுத்துமூலப் பரீட்சை தொழிற் தேர்வு /சான்றிதழ் பாடநெறி/வேறு |
|---|---|---|
| முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் | ஆசிரிய ஆலோசகர் சேவை 2 ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு ஐந்து (5) வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன் | ஆராய்ச்சி ஆய்வுக் கட்டுரை ("ஆ" பின்னிணைப்பை பார்க்கவும்) |

8.2 எவ்வளவு காலத்திற்கு ஒரு முறைவினைத்திறன்காண் தடைதாண்டல் நடாத்தப்படுகின்றது? ஒரு வருடத்திற்கு இரண்டு முறை நடாத்தப்படும்.

8.3 வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை நடாத்தும் அதிகாரி யார்?
1 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல்: கல்வி அமைச்சின் செயலாளர்

**09. மொழித் தேர்ச்சி**

9.1

| மொழி | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழி அல்லாத மொழியொன்றில் சேவையில் நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் பதவி நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் ஒரு அரசகரும மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| மற்றைய அரசகரும மொழி | அரசாங்க நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 01/2014 இற்கு அமைவாக உரிய காலத்திற்குள் உரிய மட்டத்திலான அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| இணைப்பு மொழி | சேவையிலுள்ள அனைத்து அலுவலர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தினத்தில் இருந்து மூன்று (3) ஆண்டுகளுக்குள் இணைப்பு மொழியான ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற வேண்டும். அலுவலர் ஒருவர் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் ஆங்கில மொழி தொடர்பில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேலான சித்தியொன்றை பெற்றிருப்பின் ஆங்கில மொழிப் பரீட்சையில் சித்தியடையும் தேவையில் இருந்து விலக்களிக்கப்படுவார். ஏனைய அலுவலர்கள் "இ" பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். |

**10. தரங்களுக்கான பதவி உயர்வுகள்**

10.1 சேவையில் இரண்டாம் வகுப்பில் இருந்து 1 ஆம் வகுப்பிற்கு தரம் உயர்த்துதல்

10.1.1 பூர்த்திசெய்யப்பட வேண்டிய தேவைகள் :

I. பதவியுயர்வுக்கு தகுதிபெறும் தினத்திற்கு சேவையில் 2 ஆம் வகுப்பில் குறைந்த பட்சம் 10 வருட செயலூக்கமுள்ள சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் பத்து (10) சம்பள ஏற்றங்களை பெற்றிருத்தல் வேண்டும்.

II. முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் குறிப்பிட்ட தினத்தில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

III. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்தின் படி பதவியுயர்வுத் தினத்திற்கு உடன் முன்னரான 10 ஆண்டுகளில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகை அடைவு மட்டத்தை காட்டியிருத்தல் வேண்டும்.

IV. அராங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்

V. இணைப்பு மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

VI. வேறு அரசகரும மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது அதில் விடுவிக்கப்பட்டிருத்தல்.

*10.1.2. பதவியுயர்வு முறை :*

*தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்கள் நியமன அதிகாரியிடம் கோரிக்கை விடுத்த பின்னர் தகைமைகளை பரிசீலனை செய்த பின்னர் தகுதி பெறும் தினத்தில் இருந்து செயல்படும் வகையில் 1 ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும். விண்ணப்பிக்க வேண்டிய படிவம் "உ" பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.*

**11. பதவிகளுக்கு நியமித்தல் :**

*ஒவ்வொரு மாகாணத்திற்கும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அமைவாக ஆசிரிய ஆலோசகர் சேவை அலுவலர்கள் மாகாண அரசாங்க சேவையின் பதவிகளுக்கு மாகாண கல்வி அதிகாரிகளின் ஒப்புதலுடன் கல்வி அமைச்சின் செயலாளரினால் விடுவிக்கப்படுவர். அலுவலர்கள் மாகாண அரசாங்க சேவையினுள் இணைப்புச் செய்தல் மற்றும் மாகாணத்திற்குள்ளான இடமாற்றங்கள் என்பன மாகாண கல்வி அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.*

**12. சேவைக்குரிய நிபந்தனைகள் :**

*12.1 சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் புதிய அலுவலர்கள் கல்வி அமைச்சு செயலாளரினால் பணிக்கப்படும் நிறுவனமொன்றில் நடாத்தப்படும் சேவைக்கான ஆரம்ப பயிற்சி பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சேவைக்கான ஆரம்ப பயிற்சியை பூர்த்தி செய்யத் தவறும் அலுவலர்கள் முன்னர் வகித்த பதவிகளுக்கு மீண்டும் அனுப்பப்படுவர் அல்லது சேவை முடிவுறுத்தலுக்கு ஆளாக்கப்படுவர்.*

*12.2 ஆட்சேர்ப்பு செய்யப்படும் சகல அலுவலர்களுக்கும் மேற்படி 12.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக பதில் கடமை காலத்தின் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.*

**13. பொருள் கோடல்கள் :**

*13.1 "பிரமாணக் குறிப்பு" என்பது, இலங்கை ஆசிரிய ஆலோசகர்கள் சேவை பிரமாண குறிப்பு எனப் பொருள்படும்*

*13.2 "ஆணைக்குழு" என்பது, இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 54 ஆவது உறுப்புரைக்கு அமைவாக நியமிக்கப்படும் அரசாங்க சேவை ஆணைக்குழு எனப் பொருள்படும்.*

*13.3 வேறு வகையில் விசேடமாக குறிப்பிடப்படாவிட்டால் "சேவை" என்பது, இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை எனப் பொருள்படும்.*

*13.4 "அமைச்சு" என்பது, பொதுக் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சு எனப் பொருள்படும்.*

*13.5 "மாகாணக் கல்வி அதிகாரி" என்பது, மாகாண ஆளுநரால் அதிகாரம் வழங்கப்பட்ட மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது மாகாண ஆளுநரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் எனப் பொருள்படும்.*

**14.**

*14.1 தரங்களுக்கு உள்ளீர்ப்பு :*

இந்த சேவை பிரமாணக்குறிப்பு செயல்வலுப்பெறும் தினத்தன்று சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் உரித்தாகும். குறிப்பிட்ட தினத்திற்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 மற்றும் அதற்கு இடை நேர்விளைவான சுற்றறிக்கை மூலமாக வழங்கப்பட்ட GE-01 அல்லது GE-02 சம்பள அளவுத் திட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் அலுவலர்கள் அனைவரும் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 04 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பின்வருமாறு உள்ளீர்ப்பு செய்யப்படுவர்.

*ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியின் அடிப்படையிலேயே சேவைக்காலம் கணக்கிடப்படும். எனினும், உள்ளீர்ப்புச் செய்யப்படும் காரணத்தினால் ஏற்புடைய ஆளின் சம்பள ஏற்றத் திகதியில் மாற்றம் நிகழாது என்பதுடன், அந்த திகதியானது உள்ளீர்ப்பிற்கு முன்னர் இருந்த சம்பள ஏற்றத் தினமாக மாற்றமின்றி நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன், சம்பள பரிமாற்றத்தின் போது உரிய நபர் இறுதியாக பெற்றுவந்த சம்பளப் படிமுறை புதிய சம்பள படிமுறைக்கு நேரொத்ததாக இருப்பதன் மீது தாபன விதிக்கோவையின் VII அத்தியாயத்தின் 4.4. பிரிவுக்கு அமைவாக அடுத்துவரும் சம்பளப் படிமுறையில் அமர்த்தலும் ஆகாது.*

(i) GE-*03 - தரம்* I

(அ) இலங்கை ஆசிரிய சேவையில் இருபது (20) வருடத்திற்கு குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்துடன் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் அல்லது மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆசிரிய ஆலோசகர் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு முறையாக நியமிக்கப்பட்டு அப்பதவியில் பத்து வருடத்திற்கும் (10) குறையாத சேவை அனுபவத்துடன் கூடிய ஆசிரியர்கள் ஆசிரிய ஆலோசகர் சேவை தரம் 1 இற்கு உள்ளீர்ப்பு செய்யப்படுவர்.

(ஆ) ஆசிரிய ஆலோசகர் சேவை தரம் 1 க்கு உள்ளீர்ப்பு செய்யப்படும் அலுவலர்கள் இலங்கை ஆசிரிய சேவையில் இருபது (20) வருடசெயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்துடன் ஆசிரிய ஆலோசகர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு முறையாக நியமிக்கப்பட்டு பத்து (10) வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்யும் திகதி ஆகிய இரண்டு திகதிகளிலும் பிந்திய திகதியிலிருந்து ஆசிரிய ஆலோசகர் பதவியில் அனுபவத்துடனான செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் தரம் II இற்குரிய சேவைக்காலமாகக் கருதப்படும்.

(i) GE-*03 -தரம்* II

(அ) மேற்படி தொடர் எண் (i) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத இலங்கை ஆசிரிய சேவையில் பத்து (10) வருடத்திற்கு குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்துடன் மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆசிரிய ஆலோசகர் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு முறையாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஆசிரிய ஆலோசகர் சேவை தரம் II க்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

(ஆ) ஆசிரிய ஆலோசகர் சேவையில் தரம் II க்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் அலுவலர் இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவைக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக முறையாக நியமிக்கப்பட்ட திகதி அல்லது இலங்கை ஆசிரிய சேவையில் பத்து (10) வருடசெயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்யும் திகதி ஆகிய இரண்டு திகதிகளிலும்பிந்திய திகதி ஆசிரிய ஆலோசகர் பதவியில் அனுபவத்துடனானசெயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமானசேவைக் காலம் தரம் II க்குரிய சேவைக்காலமாகக் கருதப்படும்.

14.2 உள்ளீர்ப்புக்கான நிபந்தனைகள் :

சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் அனைத்து அலுவலர்களும் சேவைப் பிரமாணக்குறிப்பு செயல்வலுப்பெறும் தினத்திலிருந்து ஐந்து (05) வருட காலத்திற்குள் 8.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் மற்றும் 9.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு மொழி தேவைப்பாடும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

14.3 மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது மாகாண பிரதம செயலாளர் அல்லது மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆசிரிய ஆலோசகர் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக முறையாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு செயல்வலுப்பெறும் தினத்திலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் ஆசிரிய ஆலோகசர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு உள்ளீர்க்கப்படுவதற்கான விருப்பத்தை தெரிவித்தல் வேண்டும்.விருப்பத்தை தெரிவிப்பதற்குரிய விண்ணப்பப் படிவத்துடனான அறிவித்தலொன்று இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் கல்வி அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்படும்.

**15.** இந்த பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கு சேவையின் அனைத்து அலுவலர்களும் இயைந்து ஒழுகுதல் வேண்டும்.

**16.** இந்த பிரமாணக்குறிப்பின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதாவதொரு விடயம் தொடர்பில் கல்வி அமைச்சு செயலாளரின் பரிந்துரைக்கு அமைவாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

**17.** இடைக்கால முன்மொழிவுகள் - ஏற்புடையதன்று.

**"அ" பின்னிணைப்பு**

*ஆசிரிய ஆலோசகர் சேவையில் 2 ஆம் வகுப்பிற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை தொடர்பான விடயங்கள்*

01. **எழுத்து மூலப் பரீட்சை - எழுத்து மூலப் பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்**

| விடயம் | நேரம் | புள்ளி |
|---|---|---|
| 1. பிரயோகக் கல்வி உளவியல், கல்வி முகாமைத்துவம் மற்றும் நவீன கல்வி பிரயோகங்களுடன் தொடர்புடைய சம்பவக் கற்கை | 2 மணித்தியாலங்கள் | 100 |
| 2. பாடத் துறையுடன் தொடர்புடைய தேர்ச்சி | 2 மணித்தியாலங்கள் | 100 |

02. **பாடத்திட்டம்**

02.1 பிரயோகக் கல்வி உளவியல், கல்வி முகாமைத்துவம் மற்றும் நவீன கல்விப் பிரயோகம் தொடர்பிலான சம்பவக்கற்கை (காலம் 2 மணித்தியாலங்கள்)

கோட்பாட்டு ரீதியான அறிவு மட்டும் இன்றி கல்வி ஆலோசகராக செயல்முறை அனுபவத்துடனான தமது ஆக்க பூர்வமான திறன், கல்விப் பாடத்திட்டத்துக்கு சமாந்தரமாக மற்றும் சாயலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ்க் காணும் துறைகளுடன் தொடர்புடைய சுருக்க வினாக்களுக்கு சம்பவக் கற்கைகள் முன்வைக்கப்படும்.

I முகாமைத்துவ எண்ணக்கருக்களை இனங்காணல் மற்றும் கல்வி முகாமைத்துவ ஐவகை செயற்பாடுகள்;

II கற்றல், கற்பித்தல், மதிப்பீடு, மற்றும் மேற்பார்வை செயற்பாடு, மேற்படி செயற்பாட்டின் ஆசிரியரின் வகிபாகம் மற்றும் சகலருக்கும் கல்வி எனும் எண்ணக்கருவின் முக்கியத்துவம்;

III விசேட தேவையுடைய மாணவர்கள் மற்றும் வகுப்பறையில் பிரயோக வகுப்புக்கள் மற்றும் வகுப்பறை பிரச்சினைகளைத் தீர்த்தல்;

உ. ம். :- வகுப்பறை முகாமைத்துவம், குறைந்த வளங்கள் மூலம் கூடிய விளைதிறனை பெற்றுக்கொள்ளும் முறை

IV இணைப்பாட விதான செயற்பாடுகள் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்;

V ஆசிரியர் திறன் மதிப்பீட்டு முறைமை;

VI மேற்பார்வை கோட்பாடுகள், மேற்பார்வை செய்யும் முறைமை, எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள்;

VII பாடசாலைப் பாடத்திட்டத்தின் தன்மை பாடத்திட்டத்தின் ஊடாக பாடசாலையை தொடர்புபடுத்துக்கூடிய விதம் மற்றும் தொழில் ஆர்வத்தை ஏற்படுத்தும் விதம்;

VIII பல்வேறுபட்ட கல்வி ஆய்வுக்கான பிரவேசம், தகவல் சேகரிப்பு முறைமை மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

02.2 பாடத் துறைக்குரிய தேர்ச்சி (நேரம் 02 மணித்தியாலங்கள்)

கற்றல், கற்பித்தல், மதிப்பீட்டு செயற்பாடுகள் மற்றும் உபகரணங்களை வகுப்பறைக்கு இயைபுடையதாக்குதல் குறித்து பரீட்சிப்புக்கு உட்படுத்தப்படும்.

03.

03.1 இந்த பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும்.

03.2 விண்ணப்பதாரர் ஒருவருக்கு தாம் விரும்பும் ஒரு மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது)

04. **பரீட்சை நடாத்தும் அதிகாரி** :

பரீட்சை ஆணையாளர் நாயகம்

05. தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையின் போது நடாத்தப்படும் செயல்முறைக் கற்பித்தல் திறன் (கற்றல்/கற்பித்தல் முறைமை மற்றும் நுட்பங்கள்) பரிசீலிப்பதற்காக நடாத்தப்படும்.

செயல்முறைப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்

| புள்ளி வழங்கப்படும் முக்கிய நியதிகள் | உச்சப் புள்ளிகள் | தெரிவு செய்யப்படுவதற்கான குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. முறையான ஆரம்ப தயார்நிலைக் குறிப்பு | 10 | 60 |
| 2. முன்வைப்பு | 10 | |
| 2.1 பிரவேசம் | 10 | |
| 2.2 பாட உள்ளடக்கம் (தலைப்புடன் தொடர்புடையது) | 10 | |
| 2.3 பாட அபிவிருத்தி | 10 | |
| 2.4 உபகரண பயன்பாடு | 10 | |
| 2.5 மீளாய்வு மற்றும் மதிப்பீடு | 10 | |
| 2.6 எதிர்கால பின்னூட்டல் | 10 | |
| 2.7 நேர முகாமைத்துவம் | 10 | |
| 2.8 வகுப்பறை முகாமைத்துவம் | 10 | |

**பின்னிணைப்பு "ஆ"**

இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை 2 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களினால் சித்தியடைய வேண்டிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை விபரம்

01. **ஆய்வுக் கட்டுரை :**

1.1 சேவைக்கு இணைத்துக் கொள்ளும் அல்லது உள்ளீர்க்கப்படும் எல்லா ஆசிரியர் ஆலோசகர்களும் கல்வி அபிவிருத்திக்கு ஏற்புடையவாறு தனது கல்வி வலயம், கோட்டம், பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முன்மொழிவொன்று, பிரச்சினை தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் நியமிக்கப்படும் குழுவிற்கு ஆய்வுக்கட்டுரை ஒன்றைச் மர்ப்பித்தல் வேண்டும்.

1.2 கல்வி அமைச்சு, செயலாளரினால் ஆய்வுக்கட்டுரை தொடர்புடைய நியதிகளை தயாரித்து சகல அலுவலர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வெளியிடப்படல் வேண்டும்.

1.3 மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் நியமிக்கப்படும் குழுவினால் ஏற்புடைய நியதிகளுக்கு அமைவாக ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கடிதம் ஒன்றை வழங்கிய பின்னர் மாத்திரம் உரிய ஆசிரிய ஆலோசகரினால் ஆய்வுக் கட்டுரைக்குரிய தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

**பின்னிணைப்பு "இ"**

ஆசிரிய ஆலோசகர் சேவை தொடர்பாக ஆங்கில மொழிப் பரீட்சை

01. ஆசிரிய ஆலோசகர் சேவை தொடர்பாக ஆங்கில மொழிப் பரீட்சை ஒரு வினாத்தாளைக் கொண்டிருக்கும்.

1. ஆங்கிலம் - 100 புள்ளிகள்

02. சித்தியடைவதற்கு இந்த வினாத்தாளுக்கு குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

03. பாடத்திட்டம்

I. General English - Time : 03 hours

Suitable level of proficiency on the following forms of grammar in the written language is expected from the candidate.

- Tenses and Numbers
- Sentences (simple/complex/compound complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Prepositions

The Knowledge on the modern formats and styles of writing is tested in following area of Study

- Summary writing
- Report writing
- Essay writing

**பின்னிணைப்பு "உ"**

**இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை 2 ஆம் வகுப்பு அலுவலர்களை**

**1 ஆம் வகுப்பிற்கு தரம் உயர்த்தல் மாதிரிப் படிவம்**

**பகுதி - 1**

01. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி..........................................................................

(ஆ) முதல் எழுத்துக்களில் குறிப்பிடப்படும் பெயர்கள் :-..........................................................................

(இ) பெயர் மாற்றப்பட்டிருப்பின் இதற்குமுன் பாவிக்கப்பட்ட பெயர் ..........................................................................

(பெயர் மற்றப்பட்டிருந்தால் மாத்திரம்))

02. பிறந்த திகதி :- ...................................

03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ........................................

04. தனிப்பட்ட முகவரி :-..........................................................................

05. தற்போது தொழில் புரியும் இடம் :-..........................................................................

06. தற்போது வகிக்கும் பதவி :- ..........................................................................

07. சேவை புரியும் இடத்திற்குரிய வலயம் :- ..........................................................................

08. சேவையில் முதல் நியமனத்திற்குரிய வகுப்பு மற்றும் திகதி.....................................

09. சேவையின் 2 ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதி மற்றும் பதவியுயர்வு கிடைக்கப்பெற்ற திகதி:-

..........................-

10. முதலாவது வினைத் திறன்காண் தடைதாண்டலில் சித்தியடைந்த திகதி மற்றும் சுட்டிலக்கம் :- ..............................

11. சேவையின் 2 ஆம் வகுப்பில் பத்து (10) வருடங்கள் பூர்த்தி செய்யப்பட்ட திகதி:- ...........................

12. பதவியுயர்வின் உடன் முன்னரான ஐந்து (05) வருடங்களுக்குள் காட்டப்பட்டுள்ள செயலாற்றுகை அடைவு மட்டம்:- .......

| வருடம் | செயலாற்றுகை அடைவு மட்டம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

13. இரண்டாம் மொழியில் சித்தியடைந்த திகதி அல்லது சித்தியடையும் தேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட திகதி மற்றும் அந்தக் கடிதத்தின் தொடர்பு எண் மற்றும் திகதி:- .................

14. இணைப்பு மொழியில் சித்தியடைந்த திகதி, சித்தியடையும் தேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட திகதி: அந்த கடிதத்தின் தொடர்பு எண் மற்றும் திகதி:- ................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும், உறுதியளிக்கின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என பதவியுயர்வு செய்யும் முன் தெரியவருமிடத்து நான் தகுதியற்றவனாக ஆக்கப்படுவதற்கு கட்டுப்படுவதோடு பதவியுயர்வு வழங்கிய பின்னர் தெரியவருமிடத்து பதவியுயர்வு இரத்துச்செய்யப்படுவதற்கு கட்டுப்படுவதற்கும் இணங்குகின்றேன். ………………….. ஆந் திகதி முதல் இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையின் முதலாம் வகுப்பிற்கு பதவியுயர்வு செய்யும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

திகதி . …………………..

………………….. …………………..
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**பகுதி - 2**

............................................................................ மாகாணக் கல்விப் பணிப்பாளர்

திரு./திருமதி/செல்வி……………………………….மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியனாவையாகும்

(i) .............................. ஆந் திகதிக்கு இரண்டாம் வகுப்பில் பத்து (10) வருட செயலூக்கமுள்ள சேவைக் காலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது/செய்யப்படவில்லை.

(ii) பதவியுயர்வுக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்திலான செயலாற்றுகை அடைவு மட்டம் காட்டப்பட்டுள்ளது/காட்டப்படவில்லை.

(iii) அந்த ஐந்து வருடத்திற்குள் அரைச் சம்பளம்/சம்பளமற்ற விடுமுறை பெறப்பட்டுள்ளது/பெறப்படவில்லை.

(iv) அந்தக் காலத்திற்குள் எச்சரிக்கை தவிர எந்தவொரு தண்டனைக்கும் உட்படவில்லை/உட்பட்டது.

(v) அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை/மேற்கொள்ளப்படுகின்றது.

(vi) உரிய காலத்திற்கான சகல சம்பள ஏற்றங்களும் பெறப்பட்டுள்ளன/பெறப்படவில்லை

(vii) .......................ஆந் திகதியில் இருந்து நியமனம் நிரந்தரமாக்கப்பட்டுள்ளது/நிரந்தரமாக்கப்படவில்லை.

(viii) முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்/சித்தியடையவில்லை.

(ix) இரண்டாம் மொழியில் சித்தியடையும் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது/செய்யப்படவில்லை.

(i) இணைப்பு மொழியில் சித்தியடையும் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது/செய்யப்படவில்லை.

இந்த அலுவலருக்கு…………………….. ஆந் திகதி தொடக்கம் சேவையில் 1 ஆம் வகுப்புக்கு பதவியுயர்வு வழங்குவதற்கு பரிந்துரை செய்கின்றேன்/செய்யவில்லை.

திகதி....................................

...................................................................
வலயக் கல்விப் பணிப்பாளர்

மாகாணக் கல்விப் பணிப்பாளர் :

இந்த அலுவலருக்கு……………………….. ஆந் திகதி தொடக்கம் 1 ஆம் வகுப்புக்கு பதவியுயர்வு வழங்குவதற்கு பரிந்துரை செய்கின்றேன்/செய்யவில்லை.

திகதி :- ……………………………………………. ……………………………………….

மாகாணக் கல்விப் பணிப்பாளர்

---

செயலாளர்,
கல்வி அமைச்சு.

இந்த அலுவலருக்கு………………………………………ஆந் திகதி தொடக்கம் 1 ஆம் வகுப்புக்கு பதவியுயர்வு வழங்குவதற்கு பரிந்துரை செய்கின்றேன்/செய்யவில்லை.

திகதி :- ……………………………………………. ……………………………………….

மாகாணக் கல்விச் செயலாளர்

**அ. அட்டவணை**

அட்டவணை 1 :

**உத்தேசிக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர் சேவைக்கான ஆசிரிய ஆலோசகர் தேவைப்பாடு மாகாணங்களுக்கு அமைவாக**

| மாகாணம் | அனுமதிக்கப்பட்ட சிங்கள மொழி மூல ஆசிரிய ஆலோசகர்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தமிழ் மொழி மூல ஆசிரிய ஆலோசகர்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| மேல் மாகாணம் | 746 | 69 | 815 |
| மத்திய மாகாணம் | 414 | 222 | 636 |
| தென் மாகாணம் | 505 | 05 | 510 |
| வடக்கு மாகாணம் | 05 | 377 | 382 |
| கிழக்கு மாகாணம் | 96 | 370 | 466 |
| வடமேல் மாகாணம் | 466 | 74 | 540 |
| வடமத்திய மாகாணம் | 282 | 22 | 304 |
| ஊவா மாகாணம் | 290 | 71 | 361 |
| சப்ரகமுவ மாகாணம் | 384 | 73 | 457 |
| மொத்தம் | 3188 | 1283 | 4471 |

அட்டவணை 2:

**உத்தேசிக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர் சேவைக்காக தேவைப்படும் ஆசிரிய ஆலோசகர்கள் (பாடங்களுக்கு அமைவாக)**

| தொடர் இல. | பாடம் | உத்தேசிக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆரம்பக்கல்வி | 1358 |
| 2 | ஆங்கிலம் | 428 |
| 3 | விஞ்ஞானம் | 267 |
| 4 | கணிதம் | 267 |
| 5 | தாய்மொழி | 253 |
| 6 | இரண்டாம் மொழி | 119 |
| 7 | வரலாறு | 164 |
| 8 | உடற்கல்வி | 168 |
| 9 | தகவல் தொழில்நுட்பம் | 146 |
| 10 | இரு மொழி | 108 |
| 11 | வழிகாட்டல் ஆலோசனை | 75 |
| 12 | ஆசிரிய நூலகர் | 34 |
| 13 | சித்திரம் | 88 |
| 14 | கீழைத்தேய நடனம்/பரத நாட்டியம் | 72 |
| 15 | இசை கீ/மே/க | 65 |
| 16 | நாடகம் மற்றும் நடனக் கலை | 110 |
| 17 | புவியியல் | 89 |
| 18 | குடியுரிமைக் கல்வி | 43 |
| 19 | வர்த்தகம் மற்றும் கணக்கியல் | 23 |
| 20 | தொழில்நுட்பம் | 45 |
| 21 | விவசாயம் | 92 |
| 22 | மனையியல் | 70 |
| 23 | விசேட கல்வி/முறைசாராக் கல்வி | 80 |
| 24 | பௌத்த சமயம் | 135 |
| 25 | கத்தோலிக்க சமயம் | 38 |
| 26 | கிறிஸ்தவ சமயம் | 14 |
| 27 | இஸ்லாம் சமயம் | 28 |
| 28 | இந்து சமயம் | 92 |
| | மொத்தம் | 4471 |

**"ஆ" அட்டவணை**

**கல்வி மற்றும் தொழிற் தகைமை :**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவனத்தால் பெறப்பட்ட பாடத்திற்குரிய ஆரம்பப் பட்டம் (பட்டம், ஆசிரிய ஆலோசகர் சேவையில் கோரப்படுகின்ற பாடத்திற்குரியவாறு இருத்தல் வேண்டும்)

II. ஆரம்பக் கல்வி, சுகாதாரம் மற்றும் உடற்கல்வி, ஆக்கத் தொழில்நுட்பம், கைப்பணிக் கலைகள் (மட்பாண்ட மற்றும் கைவினைக் கைத்தொழில்), இயந்திர தொழில்நுட்பம், நிர்மாணத் தொழில்நுட்பம், மின்சார மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம், நெசவு, மனைப் பொருளியல், மரவேலை, உலோக வேலை, விசேடக் கல்வி மற்றும் கல்வி அமைச்சினால் அவ்வப்போது அறிமுகம் செய்யப்படும் தொழில்நுட்பப் பாடங்களுக்கு பின்வரும் தகைமைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து அல்லது தேசிய கல்வி நிறுவகம் அல்லது கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் ஒரு வருடத்திற்கு குறையாத தொழிற் கல்வி டிப்ளோமா

***குறிப்பு** : -*

மேற்படி தொழில்நுட்ப பாடங்களுக்கு மேலதிகமாக தற்போதுள்ள வேறு தொழில்நுட்பப் பாடங்கள் தொடர்பில் அல்லது கல்வி அமைச்சினால் அவ்வப்போது அறிமுகம் செய்யப்படும் புதிய தொழில் நுட்பப் பாடங்கள் தொடர்பிலான ஆட்சேர்ப்புத் தகைமைகள் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சு செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

02. போதனாவியல் டிப்ளோமா (கல்வியற் கல்லூரி)

07 - 434

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.